**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 694/2019 P.W. 4/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஸ்டீம் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லப்பன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். சுமார் 4-5 வருடங்களுக்கு முன்பு தொலையாவட்டம் என்ற இடத்தில் சாலையோரமாக நின்று நான் பேசிக் கொண்டிருக்கும் போது அதிவேகமாக ஒரு இருசக்கர வாகனம் வந்து என்னை இடித்து விட்டது. அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. அதற்காக நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 30.04.2017ம் தேதி நானும் தங்கப்பன் மகன் அனில்குமார் என்பவரும் அனில்குமார் என்பவருக்கு சொந்தமான TN74B0218 என்ற இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து அனில்குமார் ஓட்ட கருங்கல் போவதற்காக புதுக்கடையில் இருந்து கருங்கல் நோக்கி சென்றுக் கொண்டிருந்த பொழுது கருங்கல்லில் இருந்து புதுக்கடை நோக்கி எதிரே வந்த பூந்துறை ஊரைச் சேர்ந்த சிபு மற்றும் இம்மானுவேல்

(எ) மானுவேல் ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் எதிரே வந்தார்கள் என்றும் இரவு 07.30 மணிக்கு நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை அனில்குமார் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று எதிரே வந்த சிபு ஓட்டி வந்த வாகனத்தை இடித்து சிபுவும், இம்மானுவேலும், நானும் கீழே விழுந்தோம் என்றும் நாங்கள் அனைவரும் மார்த்தாண்டம் ஐசக் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றும் மேலும் இம்மானுவேல் சிகிச்சை பலனின்றி 14.05.2017ம் தேதியன்று இறந்து விட்டார் என்றும் இந்த விபத்து சம்மந்தமாக சிபு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள் என்றும் கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை இல்லை.

<u>மறுவிசாரணை:</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.